# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

**************

முறையீட்டு மனு எண்: 803/2016/பேரூராட்சி

ஆணை எண்: 117/2017

நாள்: 20/05/2017

திரு. கே.எம். அக்பர் அலி,
1, தக்கட்டை தெரு,
இளையான்குடி,
சிவகங்கை மாவட்டம் – 630 702. - முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
இளையான்குடி பேரூராட்சி,
இளையான்குடி,
சிவகங்கை மாவட்டம். - எதிர் மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி பேரூராட்சியைச் சேர்ந்த திரு. கே.எம். அக்பர் அலி அவர்களின் 08.08.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 803/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது :-

## ஆணை

8.8.2016 நாளிட்ட முறையீட்டு மனுவில் மனுதாரர் திரு. அக்பர்அலி கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

1) இளையான்குடி பேரூராட்சியில் திரு. காதர் ரசூல் என்பவர் கட்டிட வரைபட அனுமதியினை மீறி 5541 சதுர அடி அளவிற்கு மூன்று தளங்கள் கொண்ட வீட்டினை கட்டியுள்ளார் என்றும் ;

2) மேற்படி கட்டிடம் கட்டப்பட்டதனால் INPT மெட்ரிக் உயர்நிலைப் பள்ளிக்கு செல்லும் பாதை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் ;

3) பேரூராட்சி மன்ற 18வது வார்டு உறுப்பினர் திரு. அன்வர் சதாத் பேரூராட்சி கடைகளை சட்டத்திற்கு புறம்பாக உள்வாடகைக்கு விடுகிறார் என்றும் ;

4) வார்டு உறுப்பினர் பேரூராட்சி வணிக வளாக சுற்றுச் சுவரை இடித்தும், அருகிலுள்ள அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிக்குண்டான காலி மைதானத்தை ஆக்கிரமிப்பு செய்தும், அந்த மைதானத்தில் சட்டத்திற்கு புறம்பான சமூக விரோத செயல்களை செய்து வருகிறார் என்றும் ;

5) பக்கீர் இராவுத்தர் தெரு மற்றும் காமராஜர் தெரு ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட சாலைப் பணிகளில் மோசடியில் ஈடுபட்டு பேரூராட்சிக்கு நிதியிழப்பினை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கண்ட புகார்களுக்கு விளக்க அறிக்கை இளையான்குடி பேரூராட்சி செயல் அலுவலரிடம் 29.8.2016 நாளிட்ட கடிதத்தில் பெறப்பட்டது. அவ்வறிக்கையில், செயல் அலுவலர் கீழ்கண்ட முகாந்திரத்தை தெரிவித்துள்ளார்:-

1) திரு. எம். காதர் ரசூல் என்பவருக்கு வழங்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதி எண்.63/2015-16-ன்படி அன்னாரது 1847 சதுர அடி கொண்ட நிலப் பரப்பில் 1735 சதுர அடிக்கு தரைத் தளமும் 1735 சதுர அடிக்கு முதல் தளமும் குடியிருப்பு கட்டிடமாக கட்ட அனுமதியளிக்கப் பட்டுள்ளது. ஆனால் கட்டிட வரைபட அனுமதியை மீறி 5541 சதுர அடிக்கு மூன்றடுக்கு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. சட்டத்திற்கு புறம்பாக கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடப் பகுதியினை இடித்து அப்புறப்படுத்த 1920ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் பிரிவு 216 மற்றும் 217-ன் படியும், மற்றும் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 56 மற்றும் 57-படி 7.12.2016 நாளிட்ட இறுதி அறிவிப்பு பேரூராட்சியால் செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

2) பேரூராட்சி 18வது வார்டு உறுப்பினர் திரு. அன்வர் சதாக், பேரூராட்சிக்குண்டான 26 கடைகளை உள்வாடகைக்கு எதுவும் விடவில்லையென்றும் உரிய முறையில் ஏலம் விடப்பட்டு வாடகை பேரூராட்சியால் வசூலிக்கப் பட்டு வருகிறது என்றும் இப்பொருள் தொடர்பாக வார்டு உறுப்பினருக்கு எவ்வித தொடர்பில்லையென்றும் குறிப்பிட்டுள்ளார்.

3) INPT மெட்ரிக் உயர்நிலைப் பள்ளிக்கு செல்லும் பாதையில் திரு. காதர் ரசூல் என்பவரது கட்டிடத்தினால் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை என்றும் மேற்புறமாக சாலை செல்கிறது என்றும் பொது மக்களுக்கும், பள்ளி செல்லும் மாணவியர்களுக்கும் எவ்வித இடையூறும் இல்லையென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) பேரூராட்சி 18வது வார்டு உறுப்பினர் திரு. அன்வர் சதாக் என்பவரால் மேற்படி உயர்நிலைப் பள்ளியில் காலி மைதானம் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை என்றும் 'பார்' மற்றும் 'கிளப்' போன்ற எதுவும் மைதானத்தில் இல்லையென்றும் தெரிவித்துள்ளார்.

5) பக்கீர் இராவுத்தர் சாலை 30 வருடங்களாக சாலை பழுது பணிகள் மேற்கொள்ளப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறதென்றும், காமராஜர் சாலையில் நீர் தேங்கும் வேளையில் மேற்படி பக்கீர் இராவுத்தர் சாலை பிரதானமாக போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும் மேற்படி இரு தெருக்களில் சாலைப் பணிகள் உரிய விதிமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்டு பணி உத்திரவு 27.10.2015ல் வழங்கப்பட்டு பணி முடிவு சான்றுகளும் பெறப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

6) பேரூராட்சி 1 முதல் 18 முடிய உள்ள வார்டுகளில் பழுதடைந்த சிமெண்ட் சாலைகளை பழுது பார்த்த பணிகளுக்குபணி உத்திரவு 27.10.2015ல் வழங்கப்பட்டு பணி நடைபெற்றன என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

4.11.2016 அன்று முறையீட்டு மனுதாரர் திரு. அக்பர் அலி விசாரணைக்கு இம்முறைமன்ற நடுவம் முன்பு ஆஜராகி கீழ்கண்ட சில கூடுதல் புகார்களை தெரிவித்தார்:-

1) சில்லரை செலவினப் பட்டியல்கள் செலவு செய்யப்படாத இனங்களுக்கும் போடப்பட்டு பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியது; துப்புரவு பணியாளர் திரு.குமரேசன் என்பவர் போலி செலவினப் பட்டியல்களை தயார் செய்து மோசடி வேலைகளில் ஈடுபடுகிறார் என்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

2) காமராஜ் நகர் பிரதான சாலையில் திரு.ஜான் முகமது என்பவர் தரை தளத்திற்கு மட்டும் (கோஎண்.82/2014-15) அனுமதி பெற்று 10,000 சதுர அடிக்கு புதுமை டிபார்ட்மென்டல் ஸ்டோர் கட்டிட அனுமதிக்கு புறம்பாக கட்டியுள்ளார் என்றும் ;

3) 32 வீடுகள் கொண்ட மைனர் தெருவில் கழிவுநீர்வாய்க்கால் வசதி செய்யப்படவில்லையென்றும், குளத்தில் கழிவுநீர் விடப்படுகிறது என்றும் ஒரே ஒரு காவேரி குடிநீர் இணைப்பு மட்டும் வழங்கப்பட்டுள்ளதென குறிப்பிட்டுள்ளார்.

4) டாக்டர் ரஹிமா உஸ்மான் ஆஸ்பிட்டல் எதிரிலுள்ள சாலை முழுமையாக அமைக்காமல் ரூ.50 லட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதென்றும் அதேபோல் வார்டு 1-18 முடிய சாலைகளில் பழுது பார்த்ததாக ரூ.8.60 லட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளதென்றும், பக்கீர் இராவுத்தர் சாலையில் பணிகளை முழுமையாக செய்யாமல் ரூ.13.0 லட்சம் செலவழிக்கப் பட்டுள்ளதெனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கண்ட கூடுதல் புகார்களுக்கு விளக்கமளிக்க 18.1.2017 அன்று அழைக்கப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராகி வாக்குமூலம் மற்றும் எழுத்து பூர்வமான பதில்களை தெரிவித்துள்ளார்:-

1) அன்றாடம் ஏற்படும் சில்லரை செலவினங்களை உரிய பட்டியல் அடிப்படையில் தயார் செய்யப்பட்டு செலவழிக்கப்பட்ட தொகை மட்டுமே செயல் அலுவலரால் ஒப்பம் பெற்று காசோலைகள் மூலம் பட்டுவாடா செய்யப்படுகிறது என்றும் இதில் முறைகேடு ஏதுமில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

2) காமராஜர் சாலையில் திரு. ஜான் முகமது என்பவருக்கு சொந்தமான 2172 சதுர அடி இடத்தில் தரை தளம் மற்றும் முதல் தளம் கட்டிக்கொள்ள 3384 சதுர அடிக்கு மட்டும் புதுமை டிபார்ட்மென்ட் ஸ்டோர்ஸ்க்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் இருப்பினும் மேற்படி நபர் இரண்டாம் தளம் அனுமதியின்றி தன்னிச்சையாக கட்டியுள்ளார் என்றும் முறையீட்டு மனுதாரர் தெரிவித்தது போல 10,000 சதுர அடிக்கு அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து வரைபட நகலை சமர்பித்துள்ளார்.

3) 8வது வார்டில் திரு. ஹமீது தாவூது என்பவருக்கு சொந்தமான வீடுகள் உள்ளன என்றும் அவரது வீட்டிலுள்ள கழிவுநீர் சிங்காரத்தோப்பு வீதியில் செல்லும் கழிவுநீர் வாய்க்கால் மூலம் அப்புறப்படுத்தப்படுகிறது என்றும் முறையீட்டு மனுதாரர் கூறுவது போல் எந்த கழிவுநீரும் குளத்தில் விடப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

4) டாக்டர் ரஹிமா உசேன் மருத்துவமனை எதிரில் அமைக்கப்பட்ட சாலையில் பழுதகற்றும் பணிகள் ரூ.13 லட்சம் செலவில் பேவர் பிளாக் கல் சாலை அமைத்திட்ட பணிகளிலும், மேலும் வார்டு 1-18 முடிய உள்ள பகுதிகளில் பழுதான சாலை பகுதிகளை

ரூ.8.6 லட்சம் செலவில் பழுது அகற்றும் செய்த பணிகளிலும், உரிய விதிமுறைகள் பின்பற்றப்பட்டு பணிகள் செய்யப்பட்டு பணி முடிவு சான்று பெறப்பட்டுள்ளன என்றும் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட முறையீட்டு மனுதாரரது மனு, வாக்குமூலங்கள், செயல் அலுவலரது விளக்க அறிக்கைகள் வாக்குமூலங்கள் மற்றும் விசாரணை ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் திரு. காதர் ரசூல் என்பவருக்கு சொந்தமான 1847 சதுர அடியில் 1735 சதுர அடிக்கு தரை தளமும் மற்றும் 1735 சதுர அடிக்கு முதல் தளம் கட்டிக்கொள்ள கட்டிட அனுமதி இளையான்குடி பேரூராட்சி செயல் அலுவலரால் கட்டிட வரைபட அனுமதி எண்.63/2015-16ன் படி வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் மேற்படி திரு. காதர் ரசூல் என்பவர் கட்டிட வரைபட அனுமதியில் வரையறுக்கப்பட்ட அளவிற்கு மேல் அதிக பரப்பளவுடனும் கூடுதலாக 2, 3வது தளங்களை கட்டியுள்ளார் என்பது உறுதியாவது மட்டுமில்லாமல் அவ்வாறாக கூடுதலாக கட்டப்பட்ட பரப்பு மற்றும் தளங்களை இடிக்க 7.12. 2016 தேதியிட்ட பேரூராட்சி அறிவிப்பு வழங்கிய பின்பும் இதுவரை திரு. காதர் ரசூல் என்பவராலோ அல்லது பேரூராட்சியாலோ நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அதே போல் புதுமை டிபார்ட்மெண்ட் கட்டிடம் கட்டிட 3384 சதுர அடிக்கு மட்டும் தரை தளம் மற்றும் முதல் தளம் கட்ட கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதுவும் விதிகளை மீறி கூடுதலான பரப்பிற்கு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது . மேற்குறிப்பிட்ட இனங்களில் விதிமீறிய செயலுக்கு பேரூராட்சியால் எவ்வித உருப்படியான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறாக விதிகளுக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு உரிய சொத்துவரி நிர்ணயிக்க தவறியது மட்டுமல்லாது அதனால் பேரூராட்சிக்கு ஏற்பட்ட நிதியிழப்பிற்கும் சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் மற்றும் பணியாளர்களே பொறுப்பென இம்முறைமன்ற நடுவம் முடிவெடுத்து அவர்கள் மீது உரிய துறை நடவடிக்கை எடுக்க பேரூராட்சி இயக்குநருக்கு பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 20-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//—

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. கே.எம். அக்பர் அலி,
   1, தக்கட்டை தெரு,
   இளையான்குடி,
   சிவகங்கை மாவட்டம் – 630 702.

2. செயல் அலுவலர்,
   இளையான்குடி பேரூராட்சி,
   இளையான்குடி,
   சிவகங்கை மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   குறளகம், சென்னை – 108.